# பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை

## கண்டி மாவட்டம

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 28 ஆந் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய 80 காணி மற்றும் கட்டிடங்கள், 34 மயான நிலங்கள் மற்றும் 30 சனசமூக நிலையங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய 278 வகையான மருந்துப் பொருளினதும், 02 கணனிகளினதும், 14 மின்சாரக் களஞ்சிய விடயங்களினதும், 44 பொதுக் களஞ்சிய விடயங்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

நிலப்பரப்பின் உறுதியின் மூலம் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாடற்ற சொத்துக்கள்

சபையிடம் இருந்து கையுழவு இயந்திரம் ஒன்று 04 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது, விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவ் வாகனம் கைதவிர்க்கப்படவோ அல்லது பழுதுபார்க்கப்படுவதற்கோ, பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) மனிதவள முகாமைத்துவம்